சரித்திர ஆய்வு

# "நீங்கள் தேவர்கள்"

"... உன்னதமானவரின் மக்கள்..." சங்.82:6

## "Ye are gods"

"Children of the most High" Ps.82:6

John S.Nathan.
Gospel Minister
Mobile: 94444 43378

**சமாதான பிரபு** (The Prince of Peace) வாகிய இயேசு நமக்களித்த மாபெரும் ஈவு எனப்படுவது நம்மை அந்தகார இருளின், சாத்தானின் ராஜ்யத்திலிருந்து (The Prince of Darkness) ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும்; **"ராஜரீகமான"** ஆசாரியக் கூட்டமாயும் (Royal Priesthood) **பரிசுத்த** ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1பேதுரு2:9). முன்பு நாம் பாவிகளாயிருந்தபோது தேவன் நமது அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, நமது பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் எபி.8:12. என்றதுடன் பாவங்கள் முழுவதையும் மன்னித்துவிட்டார். மறந்துவிட்டார் (எபி.10:17,18; சங்.103:12).

ராஜ வாழ்வும், ராஜ பாதையில் செல்லவும் வழி வகை செய்த தேவனின் அன்பு ஆணையை மீறி விலக்கப்பட்ட ஒரே கனியை அவன் புசியாமலிருந்திருந்தால் அவன் சாவாமல் பிழைத்திருந்து அவரளித்த நித்தியஜீவனையும், அவருடன் நித்திய ஆளுகை செய்யும் அதிகாரத்தையும் இழந்து அடிமையான சாத்தானுக்கு ஆளநியமிக்கப்பட்டவர்கள் அடிமையாகிவிட்டோம்! ஒ(ரே)ரு வேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை (Birthright) அற்பமாய் எண்ணி அதனை விற்றுபோட்டது போல (எபி.12:16) இன்றும் நம்மில் பலர் தேவனளித்த ஆவிக்குரிய ஆசீர்வாத நன்மைகளை, நமது சிற்றின்பங்களால், இச்சைகளால், பேராசைகளால், கீழ்ப்படியாமைகளால் நமக்களிக்கப்பட்ட எல்லா உலக பொருட்களை மட்டுமின்றி நித்திய ஜீவனையும், பரலோக வாழ்வையும் கோட்டைவிட்டு தெரு கோடியில் சுற்றிதிரிகிறோம். நமது ஆதி பெற்றோர்களுக்கு, தேவனானவர் விலக்கப்பட்ட கனியை புசிக்க வேண்டாமென்றும், அதை புசிக்கும் நாளிலே (நிச்சயமாக) சாகவே சாவாய் (ஆதி.2:17) என்றும் கட்டளையிட்டார். ஆனால் அவனோ ஜீவனை ஆசீர்வாதத்தை தெரிந்து கொள்ளாமல், மரணத்தை, சாபத்தை தெரிந்துகொண்டு நமது முன்னோடியாக மட்டுமின்றி எல்லா இழப்பிற்கும் முன்மாதிரியுமானான் (உபா.30:19). நமக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவரின் (வசனம்20) அன்பு கட்டளையை உதறிதள்ளிவிட்டு மரணத்திற்கு, பாவத்திற்கு கொத்தடிமையாகிவிட்டான் (Slave - Born) ஆம் பாவத்திற்கு அடிமையான சந்ததியாய் ஆதாமின் மக்களானோம்!

இப்படிப்பட்ட நம்மைதான், அடிமைகளின் அடிமையானவரான இயேசுகிறிஸ்து தம்மைதாமே வெறுமையாக்கி **அடிமையின்** (BOND SLAVE) ரூப மெடுத்து (தேவரூபத்தை தள்ளி) நமக்காக சிலுவைக்குச் சென்று (பிலி.2:6,7) நம்மை அடிமையாக்கினவனை (சாத்தானை) தனக்கும், நமக்கும்


அடிமையாக்கினதுடன், நாம் இழந்துபோன எல்லாவற்றையுமே திரும்பப்பெற்று ஆண்டுக்கொள்ளும் சகல அதிகாரத்தையும் நமக்களித்துவிட்டு, பரலோகத்தில் அவருடன் அமரவும், வாழ்ந்திடவும் நமக்கும் ஒரு சிறப்பான வாசஸ்தலத்தை ஏற்படுத்திய பிறகு திரும்பவும் வந்து நம்மை அங்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளார். அவர் வருவார்!

இவ்வுலகில் நம் வாழ்நாள் முழுவதும் அவரின் உத்தரவின்படியும் விருப்பத்தின்படியும் நலம் செய்யவேண்டியதாவது பூலோகத்திலே **"நீங்கள்"** (நீ) எவைகளைக் **கட்டுவீர்களோ** அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். **பூலோகத்திலே "நீங்கள்"** (நாம்) எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் (மத்.18:18; 16:18,19). இயேசுகிறிஸ்துவின் கட்டளைகளை ஏற்று விசுவாசித்து நாம் செய்யத் தொடங்கும் எல்லாவற்றையும் செய்துமுடிக்கும் பெலனை அவர் கொடுத்துதவ விரும்புகிறார். நாமும் ஒருவேளை பவுலடியாரைப்போல பெலவீனர்களாக இருந்தாலும், விசுவாசத்துடன் பெலப்படுத்துகிறவரை நோக்கி கூப்பிட்டு பெலப்படலாமே (பிலி.4:13). சிம்சோனின் கடைசி ஜெபத்தைக்கேட்டு அவனை பெலப்படுத்தின கர்த்தர் உன்னையும், என்னையும், நம்அனைவரையும் நிச்சயமாய் பலப்படுத்தி நமக்கு வெற்றி தருவார் (நியா.16:28-30).

-தொடரும்

## நடப்புச்செய்திகள்

- பல்வேறு மாநிலங்களில் பெரும் பிரச்சனையாக உள்ள நக்ஸல்களை ஒடுக்க புதிய யுக்திகளை பின்பற்றுவது என மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- நாட்டில் உள்ள அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் 2012-ம் ஆண்டுக்குள் இணையதள வசதி.
- தமிழகத்தில் உள்ள பள்ளி வாகனங்களை இனிமேல் 50 கிலோ மீட்டர் வேகத்துக்குமேல் இயக்க முடியாது இதற்கான வேகக் கட்டுப்பாட்டு கருவியை ஆறு மாதத்துக்குள் வாகனங்களில் பொருத்த ஏற்பாடு.



- தமிழ்ப் பேச்சை எழுத்து வடிவமாக மாற்றும் ஒலி உணரி மென்பொருள் விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என தமிழ் இணைய மாநாடு துணைத் தலைவர் பொ.மு.கே.கவியரசன் கூறியுள்ளார்.

## ஜெபியுங்கள்

- இந்தியாவில் நடைபெற்றுவரும் கிறிஸ்துவின் சபை ஊழியங்களுக்காக...
- கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காகவும், அவர்களுடைய வளர்ச்சிக்காகவும்...
- இக்கடைசிநாட்களில் வாழ்கின்ற அனைவரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...



# வேத அறிவுப் போட்டி எண்: 119

பாட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா பால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் லந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக ழுதவும்.

.பெலிஸ்தன் இஸ்ரவேலருக்கு முன்பாக காலையிலும் மாலையிலும் எத்தனை நாள் ந்து நிற்பான்?

.ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் குதியுள்ளவர்களாக்கினவர் எவர்?

. சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் த்தனைபேர்?

. பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன் யார்?

. யோர்தானின் தண்ணீர் எந்த ஊர் வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது?

. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே ாக்குத்தத்தமுள்ள எதுவாயிருக்கிறது?

நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும்போது ன்னவாவதில்லை என்கிறான் தாவீது?

ஆகார் இப்பொழுதிருக்கிற எதற்குச் சரியாய் சொல்லப்பட்டிருக்கிறது?

சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்று உண்டா?

0. நீங்கள் நலமானதைச் செய்யும் பொருட்டே விண்ணப்பம்பண்ணுகிறேன் என்ற ப்போஸ்தலன் யார்?



Bro.K. RAMARAJ, Preacher,
CHURCH OF CHRIST,
1.106, Thekkalur,
Nanjiyam palayam-638 657.,
TIRUPUR DISTRICT
Cell: 9487043077

Website: www.thewordofchristindia.com

